**கம்புறுபிடிய பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கம்புறுபிடிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,381,095 தொகை மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலைச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலைச் செலவுகள் ரூபா 449,625 தொகை மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோரின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது பல்வேறு அபிவிருத்தி திட்டங்களின் கீழ் 15 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,108,692 தொகை மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யாமல் கடன் கொடுத்தோரின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | சபைக்குச் சொந்தமான அம்பலத்திற்காக 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 97,108 இற்கான மின்சார சிட்டைக்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்க வில்லை. | செலுத்த வேண் டிய செலவு களுக்காக சரியாக ஏற்பாடு செய்ய வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 948,988 இற்கான உதவித் தொகையை பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெற வேண் டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 124,200 தொகை மீளாய்வாண் டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண் டிய செலவு களுக்காக சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | மீளாய்வாண்டின் போது ரூபா 182,290 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்க வில்லை. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (viii) | 2019 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,345,500 தொகை பெறுமதியான மின்பிறப்பாக்கி மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 141,617,063 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 74,340,617 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டுகள் முதல் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 1,168,845 தொகைக்கான தொங்கல் கணக்கில் செலவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 192,990,711 தொகைக்கான 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆவணங்களில் பலவினங்களை தவிர்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறைநிரப்பு பாதீடு தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சன நாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 2,141,971 தொகை பெறு மதியான வைப்புக்கள் ஆதன வளிப்பு செய்வதற்கு நடவ டிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 02 வருடங்கை மிகைத் துள்ள வைப்புக்களை ஆதனவளிப்பு செய்வத ற்காக உரிய ஆட்களு க்கு ஞாபக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களில் 05 இன் 2018 ஆண்டிற்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் 2019 பெப்ரவரி 28 திகதி வரை கணக்காய் விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது சரியான முறையில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 ஆகஸ்ட் 17 திகதி PE/01/801 இலக்கங் கொண்ட மின்சார மற்றும் வலு அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வீதி விளக்குகள் பொருத்தியிருக்கா மையினால் சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,562,171 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. | பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளுக்காக பணத்தை மீளளிப்புச் செய்வதற்காக மின்சார சபைக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,301,021 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,229,118 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,279,258 | 2,626,520 | 2,419,218 | 1,526,942 | 1,500,753 | 1,989,885 | 1,818,934 | 1,319,640 |
| வாடகை | 7,334,109 | 6,726,806 | 7,373,009 | 1,007,498 | 6,804,527 | 6,768,502 | 6,159,783 | 1,653,701 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 982,450 | 1,679,271 | 1,664,671 | 100,395 | 857,000 | 1,413,330 | 1,406,630 | 85,795 |
| ஏனைய வருமானங்கள் | 6,730,000 | 26,713,512 | 11,857,099 | 69,857,079 | 20,298,692 | 22,645,674 | 14,114,191 | 55,018,666 |
| மொத்தம் | 17,325,817 | 37,746,109 | 23,313,997 | 72,509,914 | 29,460,972 | 32,817,319 | 23,499,438 | 58,077,802 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 17,325,817 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 58,077,802 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 37,746,109 தொகை உடன் ரூபா 95,823,911 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 23,313,997 தொகை காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 72,509,914 தொகை ஆகும். வருமானங்கள் அறவீடுகளின் முன்னேற்றம் 24 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் பதிவேடுகள் சரிசெய்வதற்காக சில வருமானங்கள் அறவீடு செய்யும் போது நீதிமன்றக் கட்டளைகளின் பிரகாரம் நீண்ட காலத்திற்கு பகுதிகளாக அறவிடப்பட்டுவருகின்றது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீத வரி** | | |
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 999,597 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,328,445 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகை கட்டணத்துடன் ரூபா 2,328,042 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,128,447 தொகை ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,199,595 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. வருட ஆரம்பத்தில் நிலுவை மீதி மற்றும் ஆண்டிற்கான சிட்டையிடலுடன் அறவீடுகள் 48 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு மற்றும் மீதி யான நிலுவைத் தொகை யை அறவீடு செய்வதற்கு ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 320,043 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 24,407 தொகையாகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 17,103 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 327,347 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் அறவீடுகள், வருட ஆரம்ப நிலுவை மீதியில் மற்றும் ஆண்டிற்கான சிட்டையிடலில் 5 சதவீதமான அளவினைக் கொண்ட குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறுதியாக இனங்காணப்பட்ட நிலுவை ஏக்கர் வரி உரிமை யாளர்களுக்கு ஞாபகப்படுத் தப்பட்டுள்ளது. |

## 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கடை வாடகை** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 1,653,701 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 6,839,872 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 8,493,573 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 7,486,076 தொகை ஆக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,007,497 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வழக்குத் தாக்கல் செய்யப் பட்ட வரி செலுத்துவோரின் வழக்குத் தீர்ப்புகளின் பிரகாரம் தவணைக்காக நீண்ட காலங்களுக்கு அறவிடப்படுகின்றது. |
| **(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 85,795 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,100,390 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 1,186,185 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,085,790 தொகை கொண்டிருந்த மையால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 100,395 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. வருட ஆரம்பத்தில் | நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை மீதியை தீர்ப் பதற்கும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

காணப்பட்ட நிலுவை மீதியில் மற்றும் ஆண்டிற்கான சிட்டையிடல்களில் அறவீடுகள் 91 சதவீதம் இருந்தது.

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,412,877 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 31,669,220 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை பெறுவதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து விண்ணப்பித்துள்ளேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **துணை விதிகள்** | | |
| | 2013 அக்தோபர் 25 திகதி 1834 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் திண்மக் கழிவுப் பொருள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள் தழுவி இருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | துணை விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | செயற்படுத்தும் போது செய்முறைசார் நிலைமையில் பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. |

(ஆ) **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது குப்பை களை அகற்றுவதற்காக ரூபா 4,643,250 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த துடன் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகள் வகைப்படுத்தப்படாமல் முறைசாராத விதமாக கம்புறுபிடிய நகரில் சந்தைக்கு பின் பகுதியில் அமைந்துள்ள காணிக்கு அகற்றப்படுவதனால் சூழவுள்ள பகுதிகளில் துர்நாற்றம் பரவுதல் மற்றும் சுற்றாடல் மாசடைவதன் மூலம் பலவிதமான நோய்கள் பரவும் ஆபத்து ஒன்று காணப்படுகின்றது. | முறைசாரா விதமாக குப்பை அகற்றப்பட வேண்டும். | பொருத்தமான காணி ஒன்று கிடைத்த பின்னர் குப்பை அகற்றுவதை முறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பேன். குப்பைகள் அகற்றப்படு வதினால் ஏற்படக் கூடிய சிக்கல்கள் தவிர்த்துக் கொள்வதற்கு குறுகிய காலத் தீர்வு எடுக்கப்படுவதுடன் நீண்ட காலத் தீர்வாக குப்பை எரிக்கும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற் கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | 2030 நிகழ்ச்சி நிரழின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்கால நடவடிக்கை தொடர்பாக உத்தியோகத்தர் எவரும் அறிந்திருக்கவில்லை. |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 09 வெற்றிடங் களை நிரப்புவதற்கும், 04 மிகை பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பதவியணி பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவி களை முறைப் படுத்தவும் வேண்டியுள்ளது. | முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் தவணைப் பணங்களை செலுத்துவதை புறக்கணித்துள்ள ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 62,126 தொகை நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் விரைவாக அறவீடு செய்வதற்கு செயற்பட வேண்டும். | ஓய்வூதியத்தில் இருந்து அறவீடு செய்யக் கூடிய ஊழியர் கடனை அறவீடு செய்வதற்காக பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தி யுள்ளேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ள வாறு ஓட்ட நிலையில் இருந்து அகற்றியிருந்து அகற்றப்பட்டிருந்த கப் வண்டி ஒன்று, கை டிரக்டர் ஒன்று, 02 டெய்லர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்று என்பவற்றை சொத்துக்கள் முகாமை த்துவம் தொடர்பான 2018 மார்ச் 19 திகதிய 1/2018 ஆம் இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் அப் புறப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவாக செய்யப்பட வேண்டும். | விதப்புரைகள் கிடைத்தவுடன் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 ஒப்பந்த நிருவாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தெற்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிபிலேவெல பிரதேசத்தில் அச்சுக் கற்கள் பரப்புவதற்காக ரூபா 826,741 தொகை செலவிடப்பட்டு இருந்த போதிலும் நிர்மாண வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் முன் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற் கொண்டிருக்காமையினால் இந்த பாதை ஒரு நலன்பெறுவோரினால் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. | நிர்மாணிப்பதற்கு முன்னர் முன் சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | இட வசதிகளை போதியள வில் காணப்படாமையினால் பாதையினை இறுதி வரை அச்சுக் கற்கள் பரப்பி பாதையை அபிவிருத்தி செய்வதற்கு நேரிட்டது. |

| | | |
|---|---|---|
| (ஆ) முன்னைய ஆண்டின் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபைக்கு சொந்தமான பாதைகளில் சமிக்ஞை பலகை தயாரிப்பதற்காக ரூபா 1,530,000 தொகை செலவிடப் பட்டிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது பாதைப் பெயர் பலகைகள் பொருத்துவதற்கு கிடங்குகள் தோண்டுதல், கொங்கிரீட் பண்ணுதல், சமிக்ஞை பலகைகள் பொருத்தியுள்ள தூண்களின் உயரம் மற்றும் அறிவித்தல் பலகையின் சதுர மீற்றர் அளவு வேலை பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கையில் குறிப்பிட் டுள்ள அளவை விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நிறைவேற்றப் பட்ட வேலைப் பகுதிகளின் அளவிற்கு மாத்திரமே கொடுப்பனவு செய்ய வேண்டும். | பாதை பெயர் பலகைகளின் விவரக் குறிப்புகளுக்கு உரிய குறைபாடுகளை திருத்து வதற்கு பதிவு செய்து கொண்டேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 07 செலவு விடயங்களின் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 11,196,010 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 15 சதவீதம் முதல் 57 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே முரண்களை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 ஆம் திகதிய DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நிறுவப் பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கூட்டங்கள் நடாத்தியிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழு நடாத்து வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |